RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22319

# பெருங்கதை கட்டமைக்கும் அரசியல் நெறிகள்

சூ. ஜெஸிந்தா [அ, *], பா. ஜெய்கணேஷ் [அ]

[அ] தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்-603203, தமிழ்நாடு, இந்தியா

# The Political Postulates Constructed in the Epic Perunkathai

S. Jessintha [a, *], B. Jaiganesh [a]

[a] Department of Tamil, SRM Institute of Science and Technology, Kattankulathur-603203, Tamil Nadu, India

* Corresponding Author: jessintha1967@gmail.com

Received: 06-03-2022
Revised: 13-05-2022
Accepted: 02-06-2022
Published: 06-07-2022

Check for updates

**ABSTRACT**

During Sangam era, petty kings those who were ruling small territories or emperors who conquered many countries and built empires have followed monarchy. This was told in verses of Purananuru (400 heroic poems about kings). It said that, kingdom is hereditary; after a king, only his son has the right to rule his empire. Elderly son takes the crown and his siblings govern and support him in ruling the kingdom. The eldest one who got the right to rule differ themselves according to their mind-set. It will be a burden for those who just depend on tax collection from the people of his kingdom. Whereas it will be as easy as carrying a weight less cork for those who has nobility and excellence. Similarly, an epic King named Udhayanan, who has the right and qualities of a King was crowned by his uncle Vikkiran to rule Vaishali in his young age. This article researches and analyses the political ethics of King Udhayanan through the Tamil poem Perungathai (A Tamil poem that portraits history of King Udhayaṇan).

**Keywords:** Perunkathai, Political Ethics, Purananuru

## முன்னுரை

"நெல்லும் உயிரென்றே நீரும் உயிரென்றே
மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்
அதனால், யானுயிர் என்ப தற்கை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"

மன்னனது நீதி ஆட்சி முறையில் தான் மக்களது நல்வாழ்வு அடங்கும்; மக்கள் மகிழ்ச்சியுடனும், செழுமையுடனும் வாழ்வதும் பகை, பஞ்சம், பிணி போன்றவற்றிலிருந்து காப்பதும் மன்னன். ஆதலால் மன்னனே மக்களுக்கு உயிர் போன்றவன் என்று மோசிக்கீரனார் பாடல் மூலம் விளங்குகிறது.

"புலி புறங்காக்கும் குருளை போல
மெலிவால் செங்கோ லீபுறங் காப்ப" (Puliyur Kesigan, 2010)

உயிரெலாம் உறைவதோர் உடம்பாகிய மன்னர், புலி தன் குட்டிகளைக் காப்பதுபோல மக்களைக் காத்தான் என்பதை உதயண குமாரனின் அரசியல் நெறிமுறை வழி ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரயின் முக்கிய நோக்கமாகும்.

## அரசனும் அரசனின் ஆளுமைத்தன்மையும்

இன்னா நாற்பதில் அரசியல் நெறி அரசனையே மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அரசன் என்னும் சொல்லிற்கு, "இராசன் எப்பொருட்குமிறைவன், எழுத்துதானம் ஐந்தினொன்று, கார் முகிற் பானம், துருசு, பாணகெந்தகம், முக்குவர் தலைவன், வியாழன்" என்றும் பொருள் கூறுகிறது. அரசன் என்பதற்கு க்ரியா அகராதி "பரம்பரை உரிமையால் ஒரு நாட்டை ஆள்பவன்" என்றும், அரசன் செய்யும் அரசாட்சியை 'அரசனுடைய ஆளுகை', 'அரசன் நடத்தும் நிர்வாகம்' என்றும் பொருள் உரைக்கிறது. மேலும்

"ஏதம் அது அகற்றி உலகினுக்கு உயிராய்,

இருந்தனன், இறை குலோத் துங்கன்" (Seenivaasan, 2000)

உயிர்கட்கு நேரும் அச்சத்தைப் போக்கிப் பாதுகாக்க வேண்டிய அரசர்களே கவலை கொண்டு தளர்ந்தால் உயிர்கள் நிலை தளர்ந்து அழியும், ஆதலின் எத்தகைய இடர் நேரிட்டாலும் அரசன் வழுவாது கடமையாற்றுதல் வேண்டுமெனத் திருவிளையாடற் புராணம் குறிப்பிடுகின்றது. யானையானது தனக்குத் தீங்கிழைத்தார்க்குத் தானும் தீங்கிழைக்கச் செவ்வி நேர்ந்திருத்தல் போன்று பகைவர்களின் செயல்களுக்கு மாற்றுச் செயல் செய்ய செவ்வி நேர்ந்திருத்தல் அரசனின் கடமையாகக் கூறப்படுகின்றது.

"உறுவலி நாகத்து ஒற்றிடம் பார்த்தல்

அறைகடல் ஞாலத்து இறைகடல் ஆதலின்" (Ananthi, 2018)

தனக்குத் துன்பம் செய்தவரைக் கொல்லுதற்குத் தகுந்த செவ்வியை ஆராய்ந்திருக்கும் மிக்க வலியுடைய நாகப்பாம்பு போன்று தன் பகைவனை வெல்லுவதற்கு ஏற்ற செவ்வியை எதிர்பார்த்திருத்தலே உதயணகுமரன் கடமை என்றும் இஃது இப்பேருலகிற்கு மன்னராவோர்க்குரிய கடமையும் என்று பெருங்கதையும் சுட்டுகிறது.

## பெரியாரைத் துணைக் கோடல்

அரசன் என்பவன் தன்னை மட்டுமே நம்பியிராமல் தன் ஆட்சித்திறத்திற்குப் பெரியோர்களைத் துணைக்கொள்ளவேண்டும் என்ற கருத்தினைப் பெருங்கதையும் எடுத்துரைக்கிறது. இதனை,

"ஆற்றல் சான்ற நூல்துறை மருங்கில்

பழையவும் புதியவும், உழைவயின் பிரியார்,

காரணம் உரைப்பவும்" (Somasundranar, 1956)

என்னும் அடிகளின் மூலம் அறியமுடிகிறது. கடமை தவறாத அரசன், கற்றறிந்த சான்றோரின் உரையைத் தனக்குத் துணையாகக் கொண்டான் என்றும், அச்சான்றோர் அரசன் துன்பமுறுங்கால் அவனது துன்பம் தீர்த்தற் பொருட்டு அறிவாற்றல் நிரம்பிய மெய்நூல்களிலிருந்து பழையனவும், புதியனவும் ஆகிய நீதிகளை எடுத்துக் கூறியதாகவும் பெருங்கதை குறிப்பிடுகின்றது.

## அரசர்களின் பன்முகத் தன்மை

பெரியாரைத் துணை கொண்டிலங்கிய சங்ககாலத் தமிழரசர்களிற் பலர் பகுத்துணரும் ஆய்வாளர்களாகவும், கல்வி, கேள்விகளில் சிறந்தும் விளங்கினர். அங்ஙனமே

“வேற்றுங் கொடித்தேர் வீதியும்

பொங்குமயிர்ப் புரவியும் போர்ப்படைப் புணர்ப்பும்

நீதியும் பிறவும் ஓதிய எல்லாம்” (Ananthi, 2018)

அரச குமரர்கள் இளமையிலேயே கல்வி கேள்வி, யானையேற்றம், குதிரையேற்றம், தேர்ச் செலவு, படைக்கலப் பயிற்சி முதலியன கற்றதோடு, நீதி நூல்களையும் நன்கு பயின்று வந்தனர். கற்ற கல்வியைப் பல்லோர் அறிய அரங்கேற்றம் செய்தமையும் பெருங்கதையில் காணமுடிகிறது.

## அரசுச் சின்னங்கள்

உதயணன் அரசு நெறிமுறையில்,

“கொற்றக் குடையும் வெற்றி வேலும்

கொடியும் கவரியும் இடி உறழ்முரசும்

சங்க படவமும் கம்பல விதானமும்

அங்காந்து இயன்ற அழல்உமிழ் பேழ்வாய்ச்

சிங்காசனமும் பொங்குபூத் தவிசும்” (Ananthi, 2018)

முடி, குடை, செங்கோல், முரசு, கவறி, சிங்க இருக்கை, ஆணைச் சக்கரம், கொடி, சங்கு முதலியன முக்கிய அரசுச் சின்னங்களாக மிளிர்கின்றமை பின்வருமாறு அமைந்துள்ளது. மணிமுடி குறித்து பெருங்கதை பின்வருமாறு கூறுகிறது.

“மணிமுடிச் சென்னி மகத மன்னவன்” (Somasundranar, 1962)

பொன்னாலும், மணிகளாலும் ஆன முடியினை அரசன் அணிந்தனன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மணிமுடியின் தன்மையைக் கூறிய பிறகு அரசனின் குடை குறித்து,

“பசும்பொன் அலகில் பவழத் திரள்கால்

விசும்பு இவர் மதிஉறழ் வெண்பொன் போர்வை

தாம நெடுங்குடை தகைபெறக் கவிப்ப” (Somasundranar, 1956)

என்று, அரசன் அமரும் கட்டிலில் அவன் தலைக்கு மேலிருக்குமாறு குடை பொருத்தப்பட்டிருந்தது என்றும், அரசன் உலாச் செல்லும்போது யானைமீது குடையின் கீழ் அமர்ந்து செல்வான் என்றும், குடை, பொன்னாற் செய்த கம்பிகளையும் பவழத்தாலான காம்பினையும் கொண்டு வெள்ளிப் போர்வை போர்த்தப்பட்டிருந்தது என்றும் பெருங்கதையில் குறிப்புகள் காணப் படுகிறது. மாலை சூட்டி அழகு செய்யப்பட்டிருந்த குடையின் தோற்றம் விசும்பின் கண் தோன்றிய மதி போன்று காணப்பட்டதெனவும், அரசனுடைய குடைக்காம்பு கடவுளர் அன்றிப் பிறர்முன் வணங்காதது என்பதனை, “கடவுட்கு அல்லது கால துளக்கு இல்லது” (Ananthi, 2018).

என்று பெருங்கதை எடுத்துரைக்கின்றது. அரசனின் ஆட்சியை நிர்ணயிப்பதில் செங்கோலே இன்றியமையா இடம்பெறுகிறது. சங்க காலத்தில் எந்த மன்னனும் குடிமக்களால் அரச பதவி நீக்கம் செய்யப்பட்டதாகச் சான்று இல்லாமைக்கு அவர்தம் செங்கோற் சிறப்பே காரணமாகலாம்.

“கூற்றுயிர் கோடலு மாற்றாதாக

உட்குறு செங்கோ லூன்றி நடப்ப” (Somasundranar, 1963)

அரசனின் ஆட்சிப் பொறுப்பு சுற்றிலும் ஓயாது காவலாய் நின்று, ஓயாது சுழன்றமையால், எமனும் அதிற்பட்டு வெளித்தள்ளப் பட்டானேயன்றி உள்ளே நுழைய முடியாததாயிற்று என்றும்,

“தண்கோல் அல்லது வெங்கோல் புகாஅச்

செங்கோல்” (Somasundranar, 1956)

செங்கோல் ஆட்சியில் தண்ணிய அறம் நுழைய முடியுமே தவிர வெவ்விய மறம் புக முடியாது என்று கூறி,

“வெறுப்புஞ் செங்கோற் செல்வமும்

செருக்கிச் செல்லும் செலவினன்” (Ananthi, 2018)

மக்கள் செங்கோலை விரும்பினர்; வெங்கோலை வெறுத்தனர் என்றும் உதயணன் செங்கோற் சிறப்பை மாண்புற விளக்குகிறார் கொங்கு வேளிர். செங்கோல் போலவே அரசனின் மற்றொரு உறுப்பாகத் திகழ்ந்தது முரசு. வெற்றிக் களிப்புத் தோன்ற முரசுகள் ஒலிப்பதும், பகைவரின் முரசைக் கொள்வதும் வீரத்தின் அறிகுறியாக விளங்கியது. இவ்வாறாக முரசு ஒரு முக்கிய அரசுச் சின்னமாயிற்று.

“முத்தொடு தாமம் ததைஇ

ஏற்று உரிபோர்த்த இடியுறழ் தழங்குகுரல்

கோற் றொழில் வேந்தன் கொற்ற முரசம்” (Ananthi, 2018)

இரண்டு ஆனேறுகளைத் தம்முட் போர் செயவிடுத்து வெற்றி பெற்ற ஏற்றினுடைய தோலை மயிர்சீவாது போர்த்து முரசம் செய்யப்பட்டதெனவும் கூறப்பட்டுள்ளது. மேலும் முரசம் வைப்பதற்கெனச் சிறப்பான இருக்கை, அது முரசுக் கட்டில் எனப்பட்டது. வெற்றிமுரசு, வெண்துகில் இடப் பட்டிருக்கும் என்றும், விழா நாள்களில் நெற்கதிரைச் சூட்டி அது பூசிக்கப்படும் என்றும் கொங்குவேள் கூறுகிறார். முரசத்தை முழக்குபவர் வள்ளுவர் என்றழைக்கப்பட்டுள்ளார். அரசருடைய வெற்றியை முழக்குதல் அவரது முதன்மையான பணியாகவும் கருதப்பட்டுள்ளது. இவ்வாறாக அரசின் சின்னங்கள் குறித்தும் அவற்றின் சிறப்புகள் குறித்தும் பெருங்கதை பலநிலைகளில் பதிவுசெய்துள்ளது.

## அரசுப் பணியாளர்

அரசுச் சின்னங்கள் போன்றே அரசுப் பணியாளரும் சிறப்புற்றிருந்தனர் என்பதைப் பெருங்கதை பலவாறு குறிப்பிட்டுள்ளது. அரசனுடைய சொந்தப் பணிகளைச் செய்வதற்கும் அரச காரியங்களைக் கவனிப்பதற்கும் பணியாளர்கள் பலர் இருந்துள்ளனர்.

“மடையரு, மகளிரு, மல்லரு, அமைச்சரும்

கடையருங், கணக்கருங், காப்பரு, முளப்பட

இறைவினை திரியாப் பழவினை யாளர்” (Ananthi, 2018)

அரசுக் காரியங்களைக் கவனித்தவர்கள் கரும மாக்கள் என்றழைக்கப்பட்டனர். மேலும், அரண்மனையில் அரசனின் புகழை நின்றேத்தும் சூதரும், ஆடி மகிழ்விக்கும் விறலியரும், பணிமகளிர், பெருமூதாளர், வாயில் காக்கும் மறவர், கணக்கு பணிகளைச் செய்யும் கணக்கு மாந்தர், ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற திணைமாந்தர், காவிதிப் பட்டம் பெற்றோர், ஆவணக்களரியோர், படைமறவர் ஆகியோரும் இருந்துள்ளமை சிறப்பிற்குரியது (Ananthi, 2018).

அதுமட்டுமன்று அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர் ஆகியோரைக் கொண்ட ஐம்பெருங்குழுவும், கரணத்தியலவர், கருமாதிகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், யானை வீரர், இவுளி மறவர் ஆகிய எண் வகையினர் அடங்கிய எண் பேராயமும் சிறப்புற்றிருந்தமையைக் கொங்கு வேளிர் நயம்படக் கூறியுள்ளார்.

## பெருங்கதையில் அமைச்சர்கள்

அமைச்சர்களே அரசனின் அடிப்படை. அரசின் பக்கபலமாகத் திகழ்வது அந்த நாட்டின் அமைச்சர்கள். அத்தகைய அமைச்சர்களின் சிறப்புகளைக் குறித்து பெருங்கதை சிறப்பாக எடுத்துரைத்துச் சென்றுள்ளது.

அரச கருமம் எதுவாயினும் அரசனுக்கு ஆலோசனை கூறுபவர் அமைச்சரே என்கிறார்.

“இருநில வரைப்பி னெதிர்ப்போ ரின்றி

அருநிலை யுலகி னாட்சி விறப்பினும்

பெரும்படைக் கொற்றம் பீடழிந்து சுருங்கா

அரும்படை மன்ன ராற்றலி னெருங்கத்

தலைமையின் வழீஇய நிலைமை யெய்தினும்

உற்றது முடிக்கு முறுதி நாட்டத்துக்

கற்றுப் பொரு டெரிந்த கண்போற் காட்சி

அருமதி யமைச்சர் திருமதிற் சேரி

மாசில் பைந்தாது சுமந்த மத்தகத்

தாசில் பன்மல ரல்லியாகச்

சுடுகதி ரணிந்த சூழ்கதிர்ச் செல்வன்” (Somasundranar, 1962)

அமைச்சர் அறிவிற் சிறந்தவராயும், கடமையுணர்ச்சி மிக்கவராயும், ஒழுக்க சீலராயும், சிறந்த சொல்லாளராயும், அரசர்க்கு உற்ற தோழராயும், அவர் நலம் நாடுவோராயும், அரசன் தன்னை எதிர்க்கும் பகைவர் இன்றித் தன் ஆட்சியிற் பெருகிய போதும், தமக்குரிய கடமையிற் சிறிதும் வழுவாது அவனுக்கு உறுதி செய்வாராய், கற்றுப் பொருள் உணர்ந்தாராய், அரசனுக்குக் கழிபெருங் கேள்விக் கண் போல் அமைச்சர்கள் இருந்தமையை இவ்வாறு கூறியுள்ளார்.

“படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு” (Aacharya, 2014)

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு அங்கங்களையும் உடையவன் அரசருள் ஏறு போன்றவன் என்ற திருக்குறளுக்கேற்ப உதயணனும் யூகி என்னும் மதியூக யூகியை அமைச்சனாகப் பெற்று பல்புகழ் பெற்றான் என்பதைப் பெருங்கதையும் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

“ஆழ்விடத் துதவு மரும்புனை போலத்

தாழ்விடைத் தாங்கிச் சூழ்விடைத் துளங்கா

உள்ள வாற்ற லுறுபுகழ் யூகியும்” (Ananthi, 2018)

நிலைகொள்ளற்கியலாத வெள்ளத்தே, ஆழ்ந்த இடத்திலே துணையாகக் கிடைத்த தெப்பம் போல, அல்லற் காலத்தே அவரைக் காத்துத் தாங்கி, தம் பணியில் சிறிதும் தடுமாற்றமின்றி நெஞ்சுரம் கொண்டிலங்கியதாக அமைச்சர் தம் பெருமையாகப் பெருங்கதை பேசுகிறது. மருந்து நோயைத் தீர்த்தல் போல அமைச்சருடைய சொற்கள் அரசரின் இடர்களை நீக்கின. ஆதலின் உதயணனுடைய அமைச்சன் யூகி,

“நோயுற எறியும் மருந்தோர் அன்ன

வாய்மொழிச் சூழ்ச்சித் தோழன்” (Ananthi, 2018)

என்றும் பேசப்படுகிறான். அமைச்சர்க்குரிய கடனாக,

மன்னர்தம் தளர்ச்சி அகற்றி நீதிபுகட்டி,

“நலத்தகு சேதா நறுநெய்த் தீம்பால்

அலைத்துவாய்ப் பெய்யும் அன்புடைத் தாயின்

இன்னாசெய்தும், மன்னனை நிறூஉம்” (Somasundranar, 1956)

என்ற அடிகளில் தன் மகவினை அலைத்தேனும் ஆவின் பாலை அதன் வாயிலே பெய்யுமோர் அன்புடைய தாய் போல அமைச்சர்கள் அரசரை வற்புறுத்தியேனும் நன்னிலைக் கண் நிறுத்துவதில் தவறமாட்டார்கள் எனறு உவமை நயம் பொங்க கூறியுள்ளமை எக்காலத்திற்கும் ஏற்புடையதாய் அமைந்துள்ளது. பெருங்கதையில், வயந்தகன், இடபகன், உருமண்ணுவா என்னும் அமைச்சர் பெருமக்கள் நின்றுலவிய போதும் உற்ற நண்பனாய், உயர்ந்த அறிவாளியாய் உதயணனின் வெற்றிக்கு உறுதுணையாக யூகி வலம் வத்தமையை பெருங்கதையாசிரியர் சிறப்பித்துக் கூறுகிறார்.

“அற்றங் காத்தலின் ஆண்மை போலவும்

குற்றங் காத்தலிற் குரவர் போலவும்

ஒன்றி ஒழுகலின் உயிரே போலவும்

நன்றி யன்றிக் கன்றியது கடிதற்குத்

தகவில செய்தலிற் பகைவர் போலவும்” (Somasundranar, 1956)

இதுபோன்ற செயல்களைத் தன் நண்பனுக்காக, கடமையாகச் செய்து வந்தானேயொழிய வேறு எதனையும் நினைத்துப் பார்க்கமாட்டான் என்றும் கொங்குவேள் கூறுகிறார்.

## ஒற்றர்களின் சிறப்பு

அமைச்சர் திறம் மட்டுமன்றி பெருங்கதை ஒற்றர் பெருமையையும் பறைசாற்றுகிறது. பகைவர், குடிமக்கள், அரசியல் தொழில் புரிவோர் முதலானோர் செயல்களையும், எண்ணங்களையும் திறமையாக அறிந்து, தாம் உணர்ந்தவற்றை மந்தணமாக உரைப்போர் ஒற்றர் என்கிறது பெருங்கதை. அவரே

“உற்றதை உணரும் ஒற்றர்” (Ananthi, 2018)

எனப்படுவார். அரண்மனையின் உள்ளே தங்கிச் செய்திகளை அறியும் ஒற்றர் ‘அகத்து ஒற்றாளர்’ என்றும்,

“அகத்தொற் றாளரின் அகப்பட வறிந்தவன்”

“படை யொற்றாளர் கடுகுபு குறுகி” (Ananthi, 2018)

எதிரி படை கொண்டு வருதலையும், படையின் அளவு, வலிமை அறிந்து சொல்பவர் படை ஒற்றாளர் எனவும், நாட்டு மக்கள், அரசர், ஆட்சி பற்றியும் அறிந்துரைப்போர் படுசொல் ஒற்றர் என்றும்

“கம்பலை மூதூர் வம்பலர் எடுத்த

படுசொல் ஒற்றர்” (Ananthi, 2018)

ஒற்றரை வகைப்படுத்தியுள்ளார் கொங்குவேளிர். பகை மன்னரின் ஒற்றர் பிடிபடுவாராயின்

“பற்றா மன்னன்,

ஒற்ற ரிவரென வுரைத்தறி வுறீஇ

குற்றங்காட்டி, கொலைக்கடம் பூட்டுதும்” (Somasundranar, 1962)

குற்றம் சாட்டப்பட்டு மன்னர் கட்டளைப் படி விறகிட்டு தீ மூட்டி அதிலிட்டு சாகடிப்பர் என்றும் பெருங்கதை கூறுகிறது.

“ஒற்று மாக்களை யொற்றறின் னாயா

முற்றனக் குரைத்த மூவர் வாயவும்,

ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி” (Somasundranar, 1962)

மூன்று ஒற்றர்களுடைய சொற்களின் ஒத்த தன்மையை ஆராய்ந்து அதன் பின்னரே அரசன் தெளிய வேண்டும் என்றும் வேளிர் அறிவுறுத்துகிறார்.

## தூதுவர்

ஒற்றர் பிடிபட்டால் தண்டிக்கப்படுவார். ஆனால் தூதரைப் பகை மன்னரே ஆயினும் தண்டியார். அரசனை ஓர் உடல் எனக் கொண்டால் அவ்வுடலுக்கு, அமைச்சர் கண், மக்கள் கால், தோழர் தோள், ஒற்றர் செவி, தூதர் வாய் என அவர்தம் பணிகளைக் கொண்டு இவ்வாறாகச் சுட்டுவர். அன்பு, அறிவு, சொல்வன்மை, இம்மூன்றும் தூதரின் இன்றியமையாத பண்புகளாகக் கூறப்படுகிறது.

“தீதில் கேள்விச் சாதக னென்போன்,

உருமண் ணுவாவும் யூகியுந் தறியா

கரும மேற்கோடெரிநூலாக,

பாவிடு குழலின், ஆயிடை திரிதர” (Ananthi, 2018)

யூகியும் உருமண்ணுவாவும் இருபக்கமுள்ள பாவாகவும், அவர்களிடையே சாதகன் (குயவன்) தூது சென்றமை, ஊடை நூலை உட்கொண்டு அங்குமிங்கும் ஓடிய குழலாக ஆசிரியர் உவமித்துக் கூறியுள்ளமை இன்புறத்தக்கதாகும். எதிரியை வென்று நாட்டைப் பெற்று உதயணன் ஆட்சிக் கட்டில் ஏறியதும், அவனிடம் நட்புகொள்ள விரும்பி பிரச்சோதன மன்னன் தூதுவிடுத்தபோது பதுமையைக் (உதயணனின் இரண்டாம் மனைவி) கொங்கு வேளிர் தூதுவளாக முன்னிறுத்துகிறார்.

“மண்ணியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த

நீதிநன்னூ லோதிய நாவினள்

.....................

பணிந்த தீஞ்சொற் பதுமை யென்னும்

கட்டுரை மகளொடு கரும நுனித்து” (Ananthi, 2018)

பதுமை, தன்னரசன் ஏவிய காரியமன்றி, அரசன் மனதின்கண் கருதிய காரியங்களையும் குறிப்பினாலுணர்ந்து, அவன் ஏவாமலே தானே முற்பட்டு முடிக்கும் அரிய முயற்சியுடையவளும், சான்றோர் கூறிய நூற்பொருளை நெஞ்சிற் கொண்டு யாவரிடமும் பணிவுடனும், இனிய சொற்களை உடையவளும், பதுமை என்னும் பெயரையுடையவளும் ஆகிய தூதியோடு என்று பதுமையைத் தலைமைத் தூதனுக்குரிய இலக்கணம் முற்றிலும் அமையப் பெற்றுத் திகழ்ந்ததாகப் பெருங்கதை குறிப்பிடுகிறது.

## ஆட்சி அமைய வேண்டிய முறை

நல்லாட்சி என்பது எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பெருங்கதை பின்வருமாறு கூறுகிறது.

“கொற்ற வேந்தர் நல்திறை யளப்ப
நல்வளந் தரூஉம் பல்குடி தழைப்பச்
செல்வ வேந்தன் செங்கோ லோச்சி” (Ananthi, 2018)

“கனவினும் நனவினு மின்ப மல்லது
நுனைவேற் றடக்கைநம் புனைமுடிவேந்தன்,
நல்வினை உடையவன் பெரிதெ னப்பல்லோர்
இகழ்தல் செல்லார் புகழ்வனர்” (Ananthi, 2018)

பிற அரசர்கள் உயர்ந்த திறைப் பொருளைக் கொணர்ந்து அளக்கத்தக்க வெற்றி வீரனாக அரசன் விளங்க வேண்டும். நாட்டின் வளம் பெருக்க பல்வகைக் குடிகள் தழைத்தோங்கி செழிக்குமாறான ஆட்சி நிலவ வேண்டும். ‘எம் அரசன் இனியன்’ என்று எல்லோரும் போற்றும் வண்ணம், குடிமக்கள் நலனையே கனவிலும், நனவிலும் கருதியிருக்க வேண்டும் என்று கொங்கு வேளிர் உதயணனின் நல்லாட்சி குறித்துக் கூறியுள்ளார்.

## முடிவுரை

குடிகள் நிலையறிந்து ஆட்சி செலுத்துதல் அரசர்தம் கடமை ஆதலால், மன்னர் தீமையை வெறுப்பதோடு நல்லறம் போற்ற வேண்டும் என்பதும் வலியுறுத்தபடுவதுடன் நல்லோர் யாவரையும் குளிர் விக்கும் நிலவைப் போல குளிர்ச்சியும், தீயோர் யாவரையும் சமமாக எதிர்க்கும் பரிதியைப் போல வெம்மையும் உடையவனாக உதயணன் திகழ்கிறான். மேலும் நாடாளும் கடமை அரசனுக்கே உரியது எனினும் வீரமும், விவேகமும் கொண்ட அமைச்சர்களின் விரைந்து கடமையாற்றும் பாங்கும் அரசனின் அனைத்து நிலைகளிலும் தோள் கொடுத்துதவும் அமைச்சர் தம் பெருமையையும் பெருங்கதை எடுத்துரைக்கின்றது. அவ்விதமே உதயணனின் பெருமைக்கு இழுக்கு ஏற்படாவண்ணம் குறிப்பறிந்து தலைமைத் தூதுவனுக்குரிய இலக்கணங்களுடன் பதுமையைப் முன்னிறுத்தியிருப்பதும் பெண்மையைப் போற்றுவதாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு அரசர் தம் கடமை உணர்ந்து நல்லாட்சி செய்து திறைப்பொருளை இரவலருக்கும், வறியவருக்கும் வழங்கிக் குடிமக்கள் நலனையே எப்போதும் கருதியிருந்தல் என உதயணனின் அரசியல் நெறிகள் எல்லா நிலைகளிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## References


Aacharya, B.S., (2014) Thiruvalluvar valangiya Thirukkural, Narmatha publication, Chennai, India.

Ananthi, N., (2018) Kongu velir aruliya perungathai, Saratha publication, Chennai, India.

Kannagi, S., (2020) Aayvukal nokkil sanga ilakkiyam, Thiruvalluvar college publish, Papanasam, India.

Puliyur Kesigan., (2010) Purananuru moolamum uraiyum, Saratha publication, Chennai, India.

Seenivaasan, R., (2000) Thiruvilayadal puranam, Aniyagam, Shenoy nagar, Chennai, India.

Somasundranar, P.V., (1956) Kongu velir iyartiya perungathai, Tirunelveli’s South Indian Saiva Siddandha Publishing Society, Chennai, India.

Somasundranar, P.V., (1962) Kongu velir iyartiya perungathai, Tirunelveli’s South Indian Saiva Siddandha Publishing Society, Chennai, India.

Somasundranar, P.V., (1963) Kongu velir iyartiya perungathai, Tirunelveli’s South Indian Saiva Siddandha Publishing Society, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License